உ

ஸ்ரீ வில்லிபுத்தூர்

சௌரிப் பெருமாள்தாஸர் அருளிய

திரு அல்லிக்கேணி

# ஸ்ரீ பார்த்தசாரதி மாலை



சிவதொண்டன் நிலையம்

செங்கலடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[C]
பதிப்புரிமை பெற்றது.
ஒகஸ்ட் - 1998.

விலை : ரூ 10-00

அச்சிட்டோர் :

சென். செபஸ்தியார் அச்சகம்,
இல : 57, புனித அந்தோனியார் வீதி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திரு அல்லிக்கேணி

# ஸ்ரீ பார்த்த சாரதி மாலை

## கடவுள் வணக்கம்

### காப்பு வெண்பா

திருவல்லிக் கேணிவளர் ஐயபார்த்த சாரதிமேல்
பருநல்ல நீதிதமிழ் பாடுதற்கு - திருவல்லி
தருணமிது காக்கச் சௌரி தமிழ் விளங்கக்
கருணைபுரி வேங்கடத்தான் காப்பு.

### எழுசீரடி யாசிரிய விருத்தம்

ஒருவனே தெய்வமல்லால் வேறில்லை
உயிரெல்லா மொன்றாமே யுற்றுப் பார்த்தால்
கருவிட மேவித்து முதலுல கமாச்சு
கதிரவனா லுலகமெல்லாம் விளங்கநிற்கும்
உருவான நட்சத்திரங்க ளிருபத்தேழி
லுள்ளபடி நடக்குமல்லால் வேறில்லை
பரிமளமே திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 1

அன்னைசொல்லே காயத்திரி மந்திரமாகும்
அறிந்தவர்க்குத் தந்தைசொல்லே வேதமாகும்
மன்னுமஷ் டாக்ஷரஜப மோட்சமாகும்
வயங்குபன் னிருவாழ்வார் முகுந்தனாவார்
தன்னிடத்தில் பொறுமையுற்றா லவரே தெய்வஞ்
சத்தியமா யிம்மொழியை நம்பலாமே
பன்னுமவர் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈயாமல் வாழ்ந்தாலும் சுகமுமில்லை
இல்லிடத் தைவிட வேறேயி டமுமில்லை
ஓயாமல் பொய்யுரைத் தாற்சுக முமில்லை
ஊருடனே பகைத்தாலு முயிர்க்குச்சேதம்
நீயாகமூ ளுமினிவ னித்தியத்தில்
தெளிந்தோ ரைச்சார்ந் திடிலோ வணுகிடாது
பாயாருந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 3

பொறுமை படைத்தோர்க் கொரு பகையுமில்லை
பொய்யுரையா மாந்தர்கட்குப் பாவமில்லை
அறிவுடனே நடப்பவர்க்கு யிகழ்ச்சியில்லை
அடங்கநின்ற மன்னவர்க்கு நிந்தையில்லை
மறுமுகத்தைப் பாரார்க்கு வினையுமில்லை
மனமறியாப்பொய் யுரைத்தாற் சுகமில்லை
பருவமுள்ள திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 4

கொண்டவனை மதியாமல் பேசும்பெண்டு
குடிக்கு யமனவளை விடவே றேயில்லை
பெண்டிரண்டு கொண்டாலுஞ் சுகமுமில்லை
பெருநெருப்பு சாகளவுந் துக்கந்துக்கம்
அண்டி நின்ற விடந்தனில் மோசஞ்செய்தால்
ஆயுளுள்ள வரையும வரலைவாரப்பா
பண்டுமறை திருவல்லிக் கேணி வாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 5

அரியதனைப் பணியாத ஜன்மமெல்லாம்
அவலமதே யெடுத்து தினம்பூ மிபாரம்
மருவுமன்பர் தனக்கிடராகத் துரோகஞ் செய்தால்
மறுபடியும் கடைத்தேற மார்க்கமில்லை
உறுதிமிக யுறவாடு மோசக்கார
ருற்றதுணை யென் றொரு நம் பொணாது
பரவிவளர் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயத்தின் வெய்யில் தனிற்கா யும்பேரும்
உத்தமரைக் கண்டு துதி யாதபேரும்
மதியன்று மூத்தாளைச் சேர்ந்தபேரும்
மன்னுசுடலைப் புகையி னின்றபேரும்
அதிகாலை பாலன்ன முண்ட பேரும்
ஆயுள்விர்த் தியின்றி மிகக்குறைந் துபோவார்
பதியான திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 7

சந்தி காலத்தில் வெய்யிற் காயும்பேரும்
சற்சனரைக் கண்டு துதி செய்தபேரும்
அந்தமிகு மில்லாளைச் சேர்ந்த பேரும்
மன்னிரவிற் பாலன்ன முண்டபேருஞ்
சிந்தைமகி ழோம புகைபட் டபேருஞ்
சிரஞ்சீ வியாயு லகில் விர்த் தியாவார்
பந்தமறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 8

வலிமையுட னேழைபொருள் பறிக் கொணாது
வழக்கிருக்க வழக்கொன்று பேசொணாது
எளியாரை யெதிரிட்டுக் கொள்ளொணாது
இரப்பவரை யுதாசீ னமாய்ப் பேசொணாது
சலியாத தூர்த்தர்களைச் சேரொணாது
சற்குருவின் வாய்மொழி யைத்தள் ளொணாது
பலிதலருந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 9

அங்காடி கூடைகளைப் பறித்துத்தின்றால்
அதனைவிட தரித்திரங்கள் வேறேயில்லை
சங்கையில்லா திருந்தாலுஞ் சபையினின்று
சத்தியங் களொருபோ துஞ்செய் யொணாது
தன்கணக் கைப்பேர்த் தெழுதி மோசஞ்செய்தால்
சாமளவுஞ் சுகமுமில்லை யலைவாரப்பா
பங்கில்வளர் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஷனில்லாப் பூவைகுடி வாழ்க்கைசெய்தாற்
புவியில பகீர்த்தி யொடுநிந் தையுண்டாம்
கருஷருக்கும் புருஷனுக்கும் கலந்து வாழ்ந்தால்
கலக்கமது வந்தாலுங் கமறிப்போகும்
உரோஷத்தை யடக்காமல் ஓங்கும் பெண்கள்
உலகதனில் பட்டியெனும் வேசையாவார்
பரீக்ஷையுடன் திருவல்லிக் கேணி வாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 11

முந்நாளி லிரணியன் ராவண னுமற்ற
மூர்க்க ரெல்லாங் கர்வமதால் முழுகிப்போனார்
அந்நாளிற் சிசுபாலன் சகடன்கஞ்ச
னழிந்தார் களவரவர் களகந்தையாலே
தன்னாலே தானழிந்தான் பத்மாசூரன்
தரணியிலே யின்னமுண்டு வனந்தம் பேர்கள்
பன்னுமறை திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 12

அரியதமிழ் போதித்து முதவிசெய்து
அன்புடனே மர்மமெலா மறிந்து சொன்ன
குருவை யினிவஞ் சித்துத் துரோகஞ் செய்தால்
குறையாத பிணிவறு மைக்குடியாய் நிற்கும்
கருதுனை யபெரியோர் களுளத் தைக்காண
சதாசிவத் தாலருமை யெனச் சாற் றலாகும்
பருவமது திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 13

சாந்தகு ணப்பெரி யோரைச்சேர்ந் தபேர்க்குச்
சஞ்சலமும் வினைபிணியு மணுகிடாது
தாழ்ந்து விதிகெட்ட தென்று தாழ்ந்து வீழ்ந்தால்
தள்ளிவி டப் போகாது த ருமமல்ல
சேர்ந்திருந்த குடிவாழ்வைக் கலைத்த பேர்கள்
சகமதனி லலைவார்கள் பைசாசமாகப்
பாங்குடைய திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டபடி திரிந்தா லுஞ்சுக மிராது
காமத்தை யிச்சித்தால் வினைவிடாது
முண்டை களைச் சேர்ந்தா லும் பௌஷிராது
முன்கோப நாய்களுக்குத் துணையிராது
சண்டைமுனை நிற்பார்க்கு உயிர்நில்லாது
சண்டிகளுக் கொருபோதுஞ் சுகமிராது
பண்டிதராய்த் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 15

அன்னதா னந்தவிரத் தானமில்லை
அரிநாமம்விட வேறே மந்திரமில்லை
சொன்ன வஷ்டாட்சர மொழியே மோக்ஷமாகும்
துணைவான வாழ்வார்கள் முகுந்தனாவார்
தன்னிடத்தில் பொறுமை யுற்றால் தருமனாவார்
தைரியமுள புருஷனே தனஞ்செய னாவார்
பன்னுமறை திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 16

பொருள்தேடி யுண்ணாமற் புதைத்து வைத்தால்
பொருள்காக்கும் பசாசமெனச் சொல்லலாகும்
இருளடர்ந்த மூடருக்கு வாழ்விராது
யிரக்கமிலா கண்டர்க்குச் சுகமிராது
மருள்பிடித் தகாமு கர்க்கு வினையிராது
மார்க்கமற்று நடப்பவர்க்கு வின்பமிராது
பருவமுறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 17

மதியாதார் வாசல்வழி மிதிக்கலாமோ
மனமில்லா விடத்தி லன்னம் புசிக்கலாமோ
சதிசெய்யுந் துரோகிகளைச் சேரலாமோ
தமையனையு மனநோகப் பேசலாமோ
அதிதிகளை யுதாசினமாய்ச் சொல்லலாமோ
அரசரது பொருள் கவர்ந்து வளையலாமோ
பதியான திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளையிடுங் கள்ளருடன் கூடலாமோ
குடியருட னுறவாடி இருக்கலாமோ
அள்ளியிடும் பிச்சைதனை விலக்கலாமோ
அயலுடைமைக் காசைப்பட்டு வலையலாமோ
பெண்டுபிள்ளை பொருள்மனையும் நம்பலாமோ
புவியில்வெகு உபாயமதாய்ப் பிழைக்க வேண்டும்
பன்னுதமிழ் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 19

மனமறிந்து பொய்சொன்னா லடடாபாவி
வாழ்வதென்ன வதனாலே மகிழ்ச்சியென்ன
அனுசரிப்பு நேசர்கட்குத் துரோகஞ்செய்தா
லாடுபன்றி கோழியைப் போலழிந்து போவார்
தனதான குடித்தனத்தைக் கலைத்தபேர்கள்
சாகளவு மலைவார்கள் பசாசமாக
பனுவாகத் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 20

வஞ்சக மேயனுதி னமுஞ் செய்து செய்து
வாழ்வத னாற்பலனெ ன்ன மகிழ்ச்சியென்ன
கொஞ்சமெனவெண்ணாத பாவிநெஞ்சே
கொடிதான நரகத்தி லழியப்போறாய்
தஞ்சமென்று நல்லோரைச் சேர்ந்தாயாகில்
சகலகலைஞானமது தரிக்கச்செய்வார்
பஞ்சநதி திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 21

நல்லவர்க் குக்கோபமில்லை, பெருமையில்லை
நற்கதி யைச்சேர்ந் தோர்க்கு மோக்ஷமுண்டு
பொல்லார்க்குத் துற்குணமே பூஷணங்களாகும்
பூவுலகிலவர் பெருமை சிரிக்கலாகும்
சொல்லினுமே யவர்குணமும் வேறதாகும்
சோதித்தால் நல்லோராற் காணலாகும்
பல்லுயிர்களேத்து மல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தமர்போல் வேதாந்தம் பேசிப்பேசி
யுறுதியு ளோர்போல் பூசை செய்யலர்க்கும்
கற்றறியா மோழைகளில் ருத்திராட் சப்பூனை
கலியுகத்தி லிவர்கள் சிலவேஷக்காரர்
சித்தியுடப் புனிதருக்கு வெறிதா னுண்டு
திக்கெங்குந் திரிவார்கள் பேயனைப்போற்
பத்திவளர் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 23

வாக்கிய மேபெரி யோர்சொல் வேதமாகும்
வரிசைமுறை தள்ளாதவரே போக்கியமாகும்
யோக்கியமுட னடப்பவரே மறையோ ராவார்
உதவிசெய்யும் புண்ணியரே தெய்வமாவார்
யோக்கியமுடன் புசித்தென்ன ஈயாப்பாவி
பிணமதனுக் கிடுபிண்ட சாதமாகும்
பாக்கியமே திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 24

குளித்தென்ன குழைத்தென்ன பூசித்தென்ன
கும்பிட்டுக் கண்மூடி ஜபித்தா லென்ன
களியுறவே கேட்பவருக் கீயவேணும்
கருத்தை நிலை நிறுத்தி மெய்யைக் காணவேணும்
ஒளித்திருந்து பேசுகின்ற பாவிகட்கு
யொருபோ துஞ்சுகமில்லை ஒழிந்தநெஞ்சே
பளிங்கனைய திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 25

சாபமதாற் பொல்லாங்கு வந்தால் நல்லோர்
சற்குருவா லதனைவெல்ல விலக்கிக்கொள்வார்
கோபமுடன் காமத்தைக் கலந்தபோதுஞ்
சூக்ஷ்மமதாய்ச் சுறுக்கிலதை நீக்கிவெல்வார்
கியாபகங்கள் பிரண்டாலு மகாத்துமாக்கள்
கடுகனெவேவதனை வெல்லக் கண்டுகொள்வார்
பாபமுறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கிருக்க வழக்கொன்று பேசிப்பேசி
வாரியதென் நாவில்நீ வன்மைநெஞ்சே
ஒழுக்கமுடன் பெரியோரை யிகழ்வாய்ப்பேசி
யுலகத்திலென்ன மிகுபெருமைபெற்றாய்
அழுக்கடைந்த மாதர்குழிக் கிச்சைவைத்தே
அழிந்துமினிப்போகாதே யறையக்கேண்மோ
அழகான திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 27

தன்னைத்தான் புகழ்வாரே பசாசமாவார்
சற்குருவை மதியாதார் பிரேதமாவார்
நன்மைக் குணமில் லாதார் மூடராவார்
நாரணனைத் துதியாதார் நரகஞ்சேர்வார்
வண்மையுடன் பாகவதம் படிததபேர்க்கு
வைகுந்த பதவியது சொந்தமாகும்
பன்னிகருந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 28

மூர்க்க குணமுண் டானாலு யிர்க் குச்சேதம்
மோகமதுமத்தனையும் ரோகமப்பா
மார்க்க மறியாத வர்க்குக் தியானமில்லை
வழிதப்பி நடப்பார்க்குக் கீர்த்தியில்லை
வேர்த்த வுடற்பா டுபட்டுத் தருமஞ்செய்யார்
வேட்டகத் திலன்னமுணு்ம் பாவியாவார்
மார்க்கமுறுந் திருவல்விக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 29

எவ்வுலகு மோர்குடைக்கீ ழுண்டானபோதும்
இறந்தொ ழிந்துப்போ வாரல்லா லிருப்பாரில்லை
இவ்வுலகில் நீமாத்திரஞ் சாகேனென்னும்
எண்ணமதை விட்டுவிடு வேழைநெஞ்சே
தெவ்வுலகத் தெமதூதர் வந்துவிட்டால்
திருடனைப் போல்கீழ் மேலுமுழிக் கப்போறாய்
அவ்வுலகந் திருவல்விக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்தை யொழித்த வரையெண் ணாவஞ்சர்
அலைவார் களொரு போ துஞ்சுகமிராது
கோபத்தைப் பாராட்டும் நாய்களுக்குக்
குவலயத் திலுதவர்த துரோ கஞ்சாரும்
தீபத்தை யாலயத்தி லவித்தபேர்கள்
தீராதகொடு நரகஞ் சேர்வாரப்பா
பாபத்தைப் போக்குந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 31

மனையாள்சொற் கேட்டினிதாய்க் கெட்டபேர்கள்
வையகத்தில் கோடானு கோடியுண்டு
தனியான வுத்தமிமே லாசைவைத்துத்
தரணியிலே கெட்டவர்கள் அநேகருண்டு
இனிதான சூதாடி யழித்தபேரை
யிவ்வள வவ்வளவென் றெண்ணொணாது
பிணியணுகா திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 32

அடங்கா தமுண்டைகளாற் குடிக்குநாசம்
அஞ்சாமற்சபையில் நிற்பார் பழிக்குமஞ்சார்
அடங்கா மற்பேசுகின்ற மடையரோடே
வாய்கொடுத்தால் மோசமப்பா பௌஷிராது
ஒடுங்கிவழி நடவாத பெண்டைக் கொண்டால்
உள்ளளவுந் துக்கமது வுயர்ந்தே நிற்கும்
படங்குலவுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 33

உத்தமர்க்கு வறுமைமிக வந்தபோதும்
உள்ளமிகக்க லங்கார் மகிழ்ச்சிகொள்வார்
சத்தியமாய் நடப்பவர்க்கு யிடரேவந்தாற்
றவிராது யொருபோதுஞ் சத்தியத்தைக்
குற்றமதை நல்லோர்க்குப் பொல்லார்செய்வார்
கோபமதை யெள்ளளவுங் காட்டமாட்டார்
பத்திவளர் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுதுணர்ந் தோராயி னும்பொறு மையில்லார்
முன்னில் வருஞ்சாபத்தை விலக்கமாட்டார்
அழுதழுது புரண்டாலுஞ் சபலசித்தர்
அணுப்போது முள்ளதை நிறுத்தமாட்டார்
வழுவில் லர்ச்சற் சனருக் கெதுவந்தாலும்
மாற்றி வைப்பார னுகாமன் மண்ணின்மீது
பழுதில்லாத் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 35

வெட்கமில்லா மோப்பிகட்குப் புத்திசொன்னால்
வெள்ளரிக்காய்க் கதையாக முடியுமப்பா
அக்குதொக் குமில்லார்க் குமுறை களுண்டோ
வடங்காதமுண்டைகளுக்கெதிருமுண்டோ
கைக்கடங்குமுண்டைகட்குப் பெருமையுண்டாம்
கடுமைவந்தாலுலகமெல்லாங்கலங்கிப்போகும்
பக்குவஞ்சூழ் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 36

கொண்டவன் சொற்றடுத்ததுவும் பெண்டுதன்னைக்
கொடிதான பிணியெனக் கூறலாகும்
அண்டினவர்க்குத் தருமமது கணவன் செய்தால்
கபடழிக்கு மன்னவளால் மகிழ்ச்சியென்ன
கண்டவர்க்குப் பிள்ளைபெண்டுகளதிகமாகிக்
காசினியிலுண்டாகும் கருதிப்பாரே
பண்டையுள மறைபுகழும் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 37

அரியரனைப் பேதமதா யெண்ணும்பேர்கள்
அலைவார்கள் அலகையைப்போல் மோட்சமில்லை
கருவா மரசவாத சிவபிந்து
கட்டிவிட்டால் மூதேவி கைவிட் டேகாள்
உருவானகாயமதை விருத்திசெய்தால்
உள்ளபடி ரசவாத முடியாதப்பா
பரிவுடைய திருவல்லிக் கேணி வாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டபெண்டைச்சோரவைத்துக் கூத்தியாண்டால்
குடிவாழ்க்கையுதவா வியாதிசொந்தம்
கண்டவனையுறவாடிக் காமத்தாலே
கணவனையேபிரித்துக் கொடுந்துரோகஞ்செய்தால்
ஒண்டிபனைமரத்திலுறு பசாசமாகி
உழலுவாள்காண் ஒரு போதுஞ்சேரமாட்டாள்
பண்டிவருந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 39

மக்கள்பெண்டுதான்வாழ மனதிலெண்ணி
வழக்காடியாணையிட்டுப் பொருளைத்தேடி
நிற்குமென்று பொங்காதே பாவிநெஞ்சே
நீயேகும் வழியுனக்குஉதவியாமோ
சிக்குமிகவஞ்சமது செய்துகெட்ட
திருடனைப்பார்த்திருந்து மடடாதம்பி
பக்குவர்சூழ் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 40

சந்ததமும்ஸ்திரீகள் தமைச் சேர்வார்தங்கள்
சரீரமிகமெலிந்துவிடு மழகுபோகும்
விந்துவிடலுடலெல்லாம் வெந்துபோகும்
வீரியமுமற்றுமே மெலிந்துகேளாய்
சிந்தையதுநிலையாது வறுமையாலே
தீராதபிணியுற்றித்திகைக்கப்போறாய்
பந்தமுறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 41

முற்றிலும்வாசித்துணரா மோழைகட்கு
முண்டைகட்கு வாய்மதத்தா லகந்தையுண்டாம்
வைத்ததமிழ் கரைகண்ட பெரியோர்க்கெல்லாம்
வணக்கமுண் டுதனைப்புகழ மாட்டாரப்பா
அத்தியது போலுடலம் பருத்துவைய்யர்
அகந்தைமிகப் பேசியவரழிந்துபோவார்
பக்தியுடன் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகுவாயே. 42



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரெழுத்தைச் சொன்னாலுந் தெளிந்தசீடர்
உள்ள நாள்வரைக்கும் பூசைசெய்வார்
சீரெழுத்தைப் பலகாலு மூடர்க்குச் சொன்னால்
சிந்தையது நோவதல்லாற்சுகமிராது
வேறெழுத்தைக்கண்டோரை நோகச்செய்தால்
வெந்தணலால் மூண்டுலகிலழிந்துபோவார்
பார்மகிழும் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 43

எண்ணி எண்ணி நெஞ்சுலர்ந்து போவதல்லால்
ஏழைமதி யதனாலே யாவதென்ன
குண்ணி குண்ணியழுதாலு மாவதுண்டோ
கொழுந்து முன்பு செய்ததெல்லாம் வீணாய்ப்போமோ
தண்ணி யெண்ணி செய்யாமல் போனபாவி
நமன் கையிற் படப்போறாய் நாளை நீதான்
பன்னவர் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே! 44

கம் விட்ட மோப்பிகட்குத் துரைசோ ரென்பார்
வெளிப்பட்டால் தெரியுமந்த பேச்சுத்தானே
அக்குதொக்கு மில்லாத பெண்களப்பா
வாளனுக்கு வணங்குதனி பேசமாட்டார்
நக்கியெனும் நாய்களுக்கு வெட்கமுண்டோ
நல்வார்த்தை செய்தாலு மீனமுண்டோ
பக்குவர்சூழ் திருவல்லீக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 45

நடத்தை யெலாந்துர் நடையாய் நடந்ததுரோகி
நடுநிலையாய்ச் சபைதனிலே நீதிபேசி
அடுத்தவரைக் காக்காமற் பணத்தைச் சேர்த்து
அதனாலே நீவாழ்ந்து உளுத்ததென்ன
கடுத்துமுகம்பெரியோர்முன் கோபஞ்செய்து
கண்காட்சி யென்ன கண்டாய் நெஞ்சேகூற்றின்
படற்கஞ்சா திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிவருங் காரியத்தை யெண்ணாமற் செய்தால்
மோசம்வரும் பின்னாலே மூழ்கிப்போவாய்
தன்னிடத்தில் மகிமைமிக யிருந்த போதுந்
தாழ்ந்துலகில் நடந்தாலே விளங்குமப்பா
சின்னதெல்லாம் சங்கிதமாய்ச் செய்வோர் நல்லோர்
சிறுமிஷமாய் நினைத்தவர் களழிந்துபோவார்
பன்னுமறை திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 47

ஆரியக் கூத்தாடினு மோர்சமுத் திரத்தில்
அகப்பட்டோர் வெறியனைப்போல் தேறமாட்டார்
காரியத்தை மறவாதே மோசம்மோசம்
கடைவழிக்கு யிதுகளெல்லாமுதவாதப்பா
வீரியத்தைப்பேசியவர் பொறாமையுற்றால்
வெகுளியைப் போற்றிரியா தேயுன்னிப்பாரு
பாரிலுயர் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 48

குடியனைப்போல் வெறியனைப்போல் குழந்தையைப்போல்
குறியற்ற பெரியோர்களிருந்த போதும்
அடுத்தவரின் பொருள் தனையே கவ்வநண்ணி
வைப்பாரோ கையதன்மேல் மோசம் மோசம்
கடுமைவிட்டுப் பொறுபொறு பாவிநெஞ்சே
கண்ணனையே தியானிக்கின் மோட்சமுண்டாம்
படியுறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 49

ஆங்காரக் காலமதி லகந்தை செய்தால்
அத்தனையுந் தப்பாது வீணாய்ப்போகா
சாங்காலம் வரும்போது இவைக ளெல்லாஞ்
சத்தியமாய் வினையாக மூளுமப்பா
நீங்காம லரிநாம மந்திரத்தை
நிர்மலமாய் நினைவுற்றால் மோட்சமுண்டு
பாங்கான திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லோர்கள் பொல்லாங்குசெய்யச் சொல்லார்
நம்பியதைச் செய்தாலோ தம்பி கேளாய்
செல்வமுண்டு, கீர்த்தியுண்டு, புண்ணியமுண்டு
ஜகத்திலதைக் கேட்போர்க்கு மோட்சமுண்டு
பொல்லார்கள் நன்மொழிதான் சொன்னபோதும்
புகழ்ச்சியில்லை கீர்த்தியொரு புண்ணியமில்லை
பல்லாண்டே யோங்கு திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 51

தேசமதிற் சாலங்கள் மகாத்துமாக்கள்
செய்வார்கள் நாமதற் குய்வோமாகில்
ஆஸ்பதமாய் நரகத்தி லிறந்துபோவார்
அவர்களுக் குப்பேதமில்லை யாவுமொன்றே
வாசமுறும் நல்லோர்கள் மகிமைகாண
வையமதி லவர்களுக் குமரிது சொன்னேன்
பாசமுறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 52

பொய்யுலவும் பெண்களுக் குக்கோர பமுண்டாம்
பொங்குபுனல் காட்டிசத் தியமுஞ்செய்வார்
மெய்பேசு முத்தமிக்கு உயிர்போனாலும்
வெளிப்பட்டே சத்தியத்தை விரும்பமாட்டாள்
கையுதவி செய்தவர்கள் பெருமைபேசார்
கடைகெட்ட வுலுத்தர்கட்கு வாயுண்டாகும்
பையரவந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 53

சதமான பெருமைதனை மறக்க வேண்டாம்
சத்தியத்தை யொருபோது மழிக்கவேண்டாம்
மதமான வாங்காரங் கொள்ள வேண்டாம்
மர்மமுள்ள மந்திரத்தை விளக்கவேண்டாம்
இதமுரைக்கும் வீணர்சொல்லைக் கேட்க வேண்டாம்
ஈனருட னுறவாடித் திரிய வேண்டாம்
பதமருந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 54



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பின்றிப் பூசைமுகத் தென்ன லாபம்
ஐயமிடா திருந்தென்ன வுதவியாகும்
தன்மையில்லாத் தருமமது விளங்காதப்பா
தானென்னு மாண்மையுளா னாசமாவான்
இன்மையினிற் செய்தவொரு நன்மை திண்ணம்
எள்ளளவும் போகாமல வுருமப்பா
பன்னிருவர் புகழ் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 55

நிச்சயமா யென்வார்த்தை கேட்பாயாகில்
நீபோகும் வழிகளுக்கு மோட்சமுண்டாம்
அட்சயமாம் பொறுமை சத்தியங்கள்
அன்னதனைக் கைக்கொண்டால் தெய்வமாவார்
இலட்சணமாய்ப் பெரியோரைச் சார்ந்தாயாகில்
நரகில்லை மோட்சமுண்டு நம்புநம்பு
பட்சமுறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 56

இடியதுபோ லேழைகண்மேல் பழியைச்சாற்றி
என்னபல னனுபவிப்பாய் வையமீது
வடிவமிகு தனக்குநல்ல காலம்வந்தால்
மண்மீது வுபகாரஞ் செய்யவேண்டும்
கொடியமகா பாவியென்னும் பெயரைத்தேடி
குவலயத்தி லென்னபலன் காணப்போறாய்
படிபுகழுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 57

உத்தமர் சொற்பொருளுடையோர் கேட்கமாட்டார்
உடலமதில் வலுவுள்ளோரொடுங்கிப்பேசார்
சத்தியத்தை நினையாற்கு வாழ்விராது
சபலசித்தப் பேர்களுக்குத் துக்கஞ்சேரும்
பக்தியுள்ள மானவர்க்குக் கிலேசமில்லை
பண்புளர்சொல் லொருக்காலும் பழுதிராது
பத்திவுளர் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 58



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவென்றே வாய்திறக்குஞ் சோற்றைக்கண்டால்
அண்டசரா சரமாகும் புவனமெல்லாம்
தேவிமிசை வருசிவனாற் காண்ப தல்லால்
ஸ்ரீ கிருஷ்ண மகிமைதனைச் செப்பக்கேண்மோ
ஓமென்னு மஷ்டாக்ஷரத் தைவிட வேறேயில்லை
உறுதியாய் நம்புநீயுஞ் சொன்னேன்சொன்னேன்
பாவனமே திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 59

உறவென்று சடலத்தை நம்பவேண்டாம்
உதவாது அனித்தியத்தி லேழைநெஞ்சே
மரமேழுந் துளைத்தபிரா னடியைப்போற்றில்
மாளாய்நீ சிரஞ்சீவி யாகவாழ்வாய்
வரமென்று சொல்லவரி மந்திரமாகும்
மறவாம லெப்போதுந் தியானஞ் செய்வாய்
பரமென்னுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 60

ஆங்கார மதமெல்லாங் கொஞ்சக்கால
மறிந்திருந்து பேரொளியை நினைக்கமாட்டார்
தீங்கான செய்கைகளைக் கண்டுந் துஷ்டர்
சிந்தையிலே வணுவளவு நினைக்கமாட்டார்
வாங்காத யருகிருந்து நல்லோர் சொல்லை
மனதுற்றுந் தெளியார்கள் மடையரப்பா
பாங்கான திருவல்லிக் கேணி வாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 61

மெய்போலே பேசுவார்கள் புரட்டையெல்லாம்
வீணரவர் வேசைகளைக் கெடுக்கவெண்ணி
கைமீது கைபோட்டுக் கொடுப்பாரந்தோ
கைப்பொருளைப் பறிப்பதன்றி யவளைக்கூடப்
பொய்யாலே வருவதென்ன வலைந்த நெஞ்சே
போதனையை யுய்த்துணர்ந்து திருமாலைப் போற்று
பையணை யிற்றிரு வல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதி யைப்பணிகு வாயே. 62


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகண்மே லஞ்சாமற் பழியைப் போட்டு
இல்லையெனக் கூலியதனை யெடுத்துக்கொண்டு
வாழ்வதென்ன யிப்புவியி லனித்தியத்தில்
வைத்து எங்கேபோவாய் நீ மடமைநெஞ்சே
கோழையுடன் சேப்பமது கட்டிக்கொண்டு
குளறியுயிர் போகுமடா பாவி நெஞ்சே
பாழியுடன் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 63

மாடுபோற் சுமைகூலி கொடாத பாவி
மன்னாரசுவாமிக்குப் பிரார்த்தனை கள்செய்து
ஆடுவெட்டிப் பொங்கலிட்டுப் பலி கொடுத்து
ஆவதென்ன வதனாலே யலைந்தநெஞ்சே
தேடுகின்ற பொருளதனைத் தருமஞ் செய்யாது
தேவியர்க்குச் சேர்த்துவைத்தால் மானம் போகும்
பாடலுறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 64

களிப்புடனே வோதிவைத்த குருவுக்கீயார்
கடைகேடாய் முடிவதனில் நாசமாவார்
அனுசரிப்பார் நேசர்கள்கை யடித்துப்பின்னே
அதைமறந்தா லாசார மன்னர் சொல்வார்
சனியனிடர் வந்தாலுந் தந்தை தாயைத்
தள்ளாம லன்னவரைக் காக்கவேணும்
பிணியணுகாத் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 65

தேங்காத பெரியோர் சொல்லமுர் தமென்று
திருடர்களுக் கறிந்துகொளுந் தெளிவுமுண்டோ
நீங்காத காமுகர்க்குத் தியான முண்டோ
நிலைகாணா மூடருக்கு விவேகமுண்டோ
ஓங்காத துன்மார்க்கப் பேய்களுக்கு
ஒளிகண்டு நிலைசாரும் வண்ணமேது
பாங்கான திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேசையர்கட் கதிகமாய்ச் சூதிற்றேர்ந்து
வேடமது தரித்த சண்டனென் றுகூறத்
தோஷியவள் மெய்யென்றே யவளைநம்பி
தொண்டுசெய்யும் விதக்கடனைச் சொல்லொணாது
ஏசிடவே முடிவதனி லென்ன கண்டாய்
இலவுகாத்த கிள்ளையைப் போலானா யந்தோ
பாசமுறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 67

கற்றோர்க்கு மனங்களிக்கப் பணிகள் செய்யார்
காமுகர்க்குப் பணிவிடைக ளனந்தம்செய்வார்
சுத்தமகாத்து மாக்களுக்குத் தொண்டு செய்யார்
சூதுற்ற புலையருக்குத் தொண்டு செய்வார்
மெத்தமெத்த கர்மமதை யிகழ்ந்து கொள்வார்
வெறிபிடித்த பேய்களின் விதங்களப்பா
பத்தர்தொழுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 68

தலைமுழுக்கு நாள்மூன்றில் ஸ்திரீகள் தன்னைத்
தடமாடில் வியாதியினாற் சமாதியாவார்
பிலமென்று மனம்போ னபடி நடந்தால்
பிரியாத பிணியடைந்து பசாசமாவார்
நலமென்னும் பெரியோர் சொல்கேட்பதெல்லாம்
நற்கதியை மிகவதனிற் கீர்த்தியுண்டாம்
பலனுதவுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 69

எண்ணெயிட்டுத் தலைமுழுகிக் கலவிசெய்தால்
இறந்திடுவாய் சமர்த்தோடும் பேசவேண்டாம்
தண்ணியது மூன்றுபிழை பொறுக்குமப்பா
தலைமுழுக்கு வொரேவிசையில் தப்பா கொல்லும்
மன்னு விலக்கமது கண்டுதானால்
ாளளவு மெமவாதந் தீராதப்பா
பண்ண செயுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமத்தாலே மகிழ்ச்சி யென்றுஞ் சந்தோஷமென்றும்
கண்டதப்பா தீராத வியாதியாகும்
காமத்தால் முன்னாலே கெட்ட பேர்கள்
கணக்கில்லை தரணியிலே யனேகருண்டு
நேமத்தா லரியரனைத் தியானஞ் செய்தால்
நிர்மலமாம் பதவியரைச் சேர்ந்துவாழ்வாய்
பாபத்தை விலக்குமல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 71

மூர்க்ககுண துன்மார்க்க சேட்டை யெல்லா
முன்னுக்கு விப்போது காட்டுமப்பா
மார்க்கமிதென் றறியாத கசடரெல்லாம்
வல்லமையாய் வீண்பேச்சுப் பேசுவார்கள்
ஏற்குமோ மூடருரை வையகத்தி
லெந்நாளுஞ் சுகமில்லை துக்கமாகும்
பார்க்கவரும் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 72

வெறியரைப் போல் மூர்க்கரைப் போல் குழந்தைபோலும்
உருக்காட்டி உள்ளத்தில் வலிமை பேசி
நெறிகுறைகளதைக் காண்பதல்லால் வேறு
நிந்தையது சொன்னாலும் பாவமப்பா
பெரியோர்கள் குணமிதுவோ வனந்தரூபம்
பேய்க் குணத்தால் நம்மாலே யறிவதில்லை
பரவிலுயர் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 73

வெறியர் மத்தர் காமுகர் போற் குழந்தைபோலும்
மெய்யரைப் போலூமையைப் போல் மேலோர் தாங்கள்
நெறிகுறி களதைக் காண் நம்மாலில்லை
நியாயமிது நீயேது நினைக்கவேண்டாம்
பெரியோர்கள் குணமறிய வனந்த முண்டு
பிசாச நிகர் மாந்தரவர் காணமாட்டார்
பரவிலுயர் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 74



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரடித்துப் பொருள்தேடி வீட்டில்வைத்தால்
உனக்கென்ன லாபமதில் நரகமல்லால்
மாரடித்து அழுதகதை யடடாது ரோகி
வாழ்வதென்ன வேழைபொருள் விஷமேயல்லால்
யார்படைத்து யார்வாழ்ந்தார் பூமிமீதில்
அறிந்திருந்து மென்னவுந்தன் வஞ்சநெஞ்சம்
பார்படைத்த திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 75

நிலைகாணா சமுசாரக் கடலில் மூழ்கி
நீந்துவதேன் கரையேற வுன்னாலாமோ
விலைமா தர்செய் மோகவலை யுட்சிக்கி
மீளாம ளெந்நாளு மழிந்தா யப்பா
தலையான பெரியோா ரைச்சார்ந் தாயாகில்
தகைசேரு முத்தமமாம் நிலையைச் சொல்வார்
பலனோங்கும் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 76

அழகிருந்து முடல்பருத்து மந்தமுண்டோ
அமரிக்கை யுள்ளவள்போ லடங்கிப்பேசி
முழுகி முக்காற் குளித்தாலு மென்னலாபம்
மோகமேதான் வெறிகொண்டு திரியுமாதர்
எழிலகன்ற நாய்போல வீதிதோறும்
யிழிந்தகதை போன்மாதர் புத்திகண்டாய்
பழிகயகலுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 77

இட்சண மாயிருந் தென்ன பாரதனில்
நல்லவளா யிருந்தென்ன வபத்தைத்தள்ளில்
இட்டமுடன் முறையில்லாப் புருடர் தம்மை
இச்சிப்பதால் கிடைக்கும் லாபமென்ன
கஷ்டமுள்ள வெமபுரத்திற் றூதருன்னைக்
கட்டியடித் திழுப்பதல்லால் கருதிப்பாராய்
பட்சமுறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 78



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்போல கணவனுக் கிதவு பேசி
மேன்மேலு முறவாடி வேண்டிக் கொள்வார்
நெய்யாலும் பாலாலும் உபசரித்து
நேர்மை பெறக் கும்பிட்டு நித்திரை கொள்வார்
ஐயையோ பாவி நீ யிவள்மனதை
அறியாம லவள் நிலையில் நிற்பதேனோ
பையரவி னடிதநோன் வாழல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 79

தெருவிலே சமர்விளைக்கு மோப்பிகட்கு
தயவேது பயமேது தெய்வமேது
இருநிலத்தி லவர்க்கொருவர் நிகருமேது
இனியதன் கணவனுக்கு மஞ்சாளப்பா
மருவிமனை சுகிக்கும் வண்மைவிட்டே
மாந்தர்க்குத் தொண்டுசெய்யும் வழியைத்தேடு
பருவமுயர் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 80

அடிபாவி சண்டாளி கணவன்றன்னை
அஞ்சாமல் வஞ்சித்துக் கபடுபேசி
வடிவில்லா முடவனுக்கு வேணதீந்து
மனமகிழ்வா யிச்சித்தே மானமற்று
முடுகியுயிர் போகின்ற வேளைதன்னில்
விழிபிதுங்கி எமபுரத்திற் சுழலப்போறாய்
படிபுகழுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 81

கள்ளமனப் புருடரது உறவு கொண்டே
கட்டியவ ளணைந்தசுகங் கழறப்போமோ
எள்ளளவு மிரக்கமில்லா தூதர்தம்மால்
எமனுலகி லெரிதழுவச் செய்வா ரந்தோ
உள்ளபடி யநுபவத்தை யெடுத்துச் சொன்னேன்
ஒருவரையும் விடுவதில்லை உறுதியாகப்
பள்ளிகொள்வான் மறையல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 82



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்கணவன் மன்மதனைப் போலே யோங்க
    கற்பனைசெய் சண்டாளி தரணிமீது
கன்மமிகு பாவிகட்குப் பொருளைத் தந்தே
    காதலுடனே யதனைச் சேர்வதென்னே
அந்நிதமா யெமபுரத்தி லிவளை யந்தோ
    அக்கினியிற் றள்ளுகையில் துணையார் செய்வார்
பன்னரிய திருவல்லிக் கேணிவாழும்
    பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 83

கொண்டவனைக் கருதாமல் மோகஞ் செய்யுங்
    குடிகேடி வையமதி லலைவாள் வீணே
சண்டபடி கண்டவரை விழிகள் காட்டிக்
    கடைகெட்ட நர்ய்கைப்போல் கலப்பதென்னே
தண்டனைக ளிவள்தனக்கு யமலோகத்தில்
    செய்வதல்லா னரகின்றி மீளாதப்பா
பண்டுமறை யோங்குமல்லிக் கேணிவாழும்
    பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 84

கொஞ்சத்துக் கொருவர் பொருள் மீதிகொண்டால்
    குடியது விளங்கவே மாட்டாதப்பா
வஞ்சகமே மண்மீது செய்து நீயும்
    வாரியதென் னவிலுவாய் மடைமை யோனே
நெஞ்சறியப் பொய்யுரைத்தாற் றிருவுநிற்காள்
    நிச்சயமா யென்மொழியை நம்புநீயும்
பாக்கியமே திருவல்லிக் கேணிவாழும்
    பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 85

ஊரையடித் தடாபாவி யுலையிற்போட்டு
    உள்ளவுந் தீராத வினையையுற்றாய்
போரடிக்குங் களத்தினிலே திருடியுண்டாற்
    பூவுலகி லுள்ளளவும் பெருமையில்லை
பாரடித்த ஏழைகளை நோகச்செய்தால்
    மகத்தான நரகமப்பா மாண்டு நீங்கா
பாரடித்தோ ரேத்துமல்லிக் கேணிவாழும்
    பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 86



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சையுட னொருவனையே மணம்புரிந்து
இன்பமெலாந் தலைவிதி போலனுபவித்தே
அச்சமற வதனையித ராளுக்கொப்பா
மார்க்கமென வறைவதென் கொலடங் காப்பாவி
லச்சையிலாள் மனம்போனபடி நடப்பாள்
ராச்சியத்தி லவள் நடைக்கோ ரெதிருமில்லை
பச்சை நிறமாலோங்கு மல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 87

பிராயத்திற் கூசாம லிருட்டு வீட்டில்
பிரியாம லொருவனிட மிருக்கும்போது
வருத்த முடனவள் புருஷன் கண்டுபேச
வாய்புதைத்துப் பேசாம லெழுந்து சென்றாள்
கருத்திலினி யவனையிவளப்ப னென்றோர்
கண்காட்சி யாய்க்கண்டு கணக் கோவையார்
பருந்திலகுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 88

ஏழைகளு மழுதகண்ணீர் வீணாய்ப்போமோ
எப்போது முன்குடிக்கு நாசமுண்டாம்
வாழ்வதனைச் சதமெனவே வகந்தை பேசின்
மாளளவுந் துக்கமுறுஞ் சுகமிராது
கோழையுளார் தமையடித்துப் பறித்துத்தின்றார்
குவலயத்தி லுள்ளளவுங் குன்றாப்பாவம்
பாபத்தைப் போக்குந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 89

மனையாட்டி மகிழ்ச்சியுற வார்த்தைபேசி
வாழ்வதென்ன வதனாலே முயற்சியென்ன
இனிதான பெரியோர்சொல் கேளாததாலே
எப்படியுங்கேடு வருங் கீர்த்தி குன்றும்
சனியான துடர்நடையாய் வுலகிலுள்ள
சகலர்களும் நகைசெய்யு முடல்தானாகும்
பனிமலர்சூழ் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியர்கள் பொருள்மீது இச்சைவைத்தால்
பிள்ளைபெண்க ளொருபோதும் விர்த்தியாகா
தெண்ணி மனமறிந் துலகில் மோசஞ்செய்தால்
அதைவிடவும் பாவங்கள் வேறேயுண்டோ
மண்ணுலகில் ஜனனமெலாந் திரிந்துமென்ன
வண்மையுட னொருபொழுது மிருந்தாலென்ன
பண்ணுலவுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 91

முழுகியபின் னுடம்பெல்லா மஞ்சட்பூசு
மோப்பிகளும் பசித்தவருக் கன்னமீயார்
வொழுகிமிகக் கணவனுடன் மெய்போல்பூசி
ஊராரை யிச்சிக்குங் கொடியபாவி
அழிகாலம் வந்தடுத்தால் கோதானங்கள்
அபரிமிதமாய்ச் செயினும் விடுமோ பாவம்
பழியணுகா திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 92

கணவனவன் தருமங்கள் செய்யவெண்ணக்
கடுஞ்சினமாய்க் கூச்சலிட்டே கதறிவீழும்
பிணமனையாள் செத்தென்ன இருந்துமென்ன
பேயவளா லுனக்குவரும் புகழ்ச்சியென்ன
மணமுடையா ளாகின்றோம் வையமீது
மாட்சிமையு மிகபரசா தனமும் வாய்க்கும்
பணியளவுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 93

புருஷர்க்கு வஞ்சகமாய் நடக்கும் பாவி
பொல்லாத மூதேவி புழுத்துமேனி
கர்ச்சித்துப் பருத்தோடு நாய்பிடுங்கப்
படுவார்கள் கண்டவர்க ளெவருமேச
அருச்சித்து மலைவாளே மறுபிறப்பில்
ஐயையோ யிடுக்கண்கள் சொல்லப்போமோ
பரிசமுறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 94



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருந்ததியைச் சாட்சிவைத்தே தாலிகட்டும்
அருமையுள்ள கணவனையே வகந்தைபேசி
பொருந்து மனதின்படியே வுலகில்வேறே
புருஷர்களை யிச்சித்தே திரிந்தபாவி
தெரிந்திருந்து மவளுடனே யென்னநட்பு
சேணுலகில் வாழ்வதனாற் றீமையுண்டாம்
பரிந்தவர்கட் கருள்புரி யுமல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 95

சிங்காரஞ் செய்துபதி விரதை யைப்போற்
றேசுலவுஞ் சபைநடுவில் நின்றுபேசிப்
போங்காலத்தா லவளு மகலிற்போக
புத்தியில்லா தவளுடனே பொருந்தலென்னோ
வாய்க்கொழுப்பாற் கண்டவரை வலுவிற்பேசி
வலதுசொலு மூதேவி புழுத்துச் சாவாள்
பாங்கான திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே, 96

பூமியிலே பொல்லாத பாவியென்று
புண்ணியர்க ளெல்லவரும் யிகழப் பெற்றாய்
காமிகளைச் சேருவதோ கபடமார்க்கம்
கரையேற மாட்டாய்நீ கண்டுகொள்ளே
சீமையிலே இரந்துண்டே திரிபவர்க்கு
சிலவழித்தாற் பொருளதனை மோட்சமுண்டு
பார்மிக்குந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 97

சார்தருமஞ் செய்தோர்க்குத் தாழ்விராது
சற்குருவை நினைப்போர்க்குக் குறைவிராது
மூர்க்கமுட னடப்போர்க்கு வாழ்விராது
முண்டைகளுக் கீந்தபொருள் முன்வராது
தீர்க்கமுள்ள பெரியோர்க்குச் சினமிராது
திறமையுள்ளோர் சொல்லென்றுந் தவிரமாட்டார்
பாருலவுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 98


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌரிதமிழ்ப் படித்தவர்க் குக்கியான முண்டாம்
சந்ததியோட யிச்வரியந் தழைத்து ஓங்கும்
எவர்களுமே கொண்டாடும் கீர்த்தியுண்டாம்
எழில்பார்த்த சாரதி துணையுண்டாகும்
தவறில்லா வாழ்வாரா தியர்களோடே
சத்தியமாய் வாழ்ந்திருப்பார் வையகத்தில்
பந்தமுறுந் திருவல்லிக் கேணிவாழும்
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 99

சிங்கார மாயிலகுங் கருடன்மீது
சிறப்புடனே பன்னிரண் டாழ்வார்கள் சூழப்
பொங்கு திருப்பாற் கடலிற் சேடன்மீது
புகழுடனே பள்ளிகொள்ளும் அரங்கநாதன்
செங்கண்மாற் திருவல்லிக் கேணிதன்னிற்
திகழ்பார்த்த சாரதியே சிறியேன் தன்னைப்
பங்கமில்லா தருள்வைத்துப் பாதுகாத்த
பார்த்தனிட சாரதியைப் பணிகு வாயே. 100

## தனிவிருத்தம்

இசையோடு பாடுஞ் சங்கீதமதைவிட
இன்னதென் றறிவேனோ குங்குமமதை
அசையாதே சுமந்திடுங் கழுதையெனினும்
அதனழகை அறியுமோ கற்கண்டு சுவையை
விசையாக வேயெழுங் காகமறியு மோநாய்
வீறுதேங்காய் ருசியை யறியுமோ குருடன்
உசிதமாணிக்க யொளியினோங்க
ஒங்குமாற் பெருமைதனை மூடனறிவானோ ? 101



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org